# மாநகர பொது வீடமைப்புகளில் வெ.7 கோடி வெள்ளி வரை வாடகை பாக்கி


## 26 ஆண்டுகள் வரை கூட பலர் வாடகை செலுத்தவில்லை

கோலாலம்பூர், மே 21- கோலாலம்பூர் மாநகரில் உள்ள பல பொது வீடமைப்புத் திட்டங்களில் கடந்த 26 ஆண்டுகளுக்கும் மேலாக வாடகை செலுத்தாமல் 39,140 வெள்ளியை பலர் பாக்கி வைத்திருப்பதாக கோலாலம்பூர் மேயர் மைமுனா ஷரித் தெரிவித்தார்.

பராமரிப்பு செலவினங்களையும் சேர்த்து இந்த வீடுகளுக்கு மாத வாடமை 124 வெள்ளி தான். கம்போங் முஹிபாவில் உள்ள பிபிஆர் குடியிருப்பில் உள்ள மக்கள் 19 லட்சம் வெள்ளி வாடகை பாக்கி வைத்திருக்கிறார்கள்.

அதை அடுத்து டேசா ரெஜாங்கில் உள்ள மக்கள் 12 லட்சத்து 80,000 வெள்ளி வாடகை பாக்கி வைத்திருக்கிறார்கள். கோலாலம்பூர் மாநகர மன்றத்தால் நிர்வகிக்கப்படும் இந்த வீடுகளுக்கான செலுத்தப்படாத வாடகை வெ.7 கோடியை எட்டியிருக்கிறது.

அடுத்த வாரம் தொடங்கி



அந்த மக்களுடன் கலந்துரையாடல் நடைபெறும். இந்த வாடகையை அவர்களால் ஏன் செலுத்த முடியவில்லை என்ற காரணங்கள் ஆராயப்படும்.

குடிநீர் மீட்டரையும் அவர்கள் பூட்டி வைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் எல்லாம் பி40 வருமான பிரிவை சேர்ந்தவர்கள். அதனால் இதனை மிக கவனமாக கையாள வேண்டும். எடுத்தவுடன் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்ற முடியாது.

கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபாவுடன் இது பற்றி பேசுவேன். அங்கு வருகை புரியும் போது தங்கள் வாகனங்களை நிறுத்த போதுமான இடங்கள் இல்லை என்று அவர்கள் குறை சொல்கிறார்கள்.

வாகனம் என்பது அவசியமான ஒன்றுதான். ஆனால் தங்கள் வாடகையை செலுத்தாமல் இருப்பதற்கு சில காரணங்களும் உண்டு என்று அவர்கள் கூறுகிறார்கள். இனி வரும் காலங்களில் வாடகை செலுத்தாத குடியிருப்பு வாசிகளுக்கு நோட்டீஸுகள் வழங்கப்படும்.

குடிநீர் விநியோகத்தை நிறுத்தினால் அவர்கள் இந்த வாடகையை செலுத்த முன்வருவார்கள். எனினும் இதையெல்லாம் செய்ய விரும்பவில்லை. தவணை முறையில் வாடகை பாக்கியை செலுத்துங்கள் என்று கூறியும் அதை அவர்கள் செய்யவில்லை என்றார் அவர்.